[20th January 1961

கைகள் எடுத்து மத்திய சர்க்காருக்கு தெரிவிப்பார்களா? இந்த விற்பனை வரி மேல் கை வைக்கக்கூடாது என்று சொல்வார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : அங்கத்தினர் அவர்கள், இந்த விற்பனை வரியைக் கூட மத்திய அரசாங்கம் எடுத்துக் கொள்கிறது என்று சொன்னார்கள். ஒருவரும் எடுத்துக் கொள்ள வில்லை. அதற்குப் பதிலாக அடிஷனல் எக்ஸைஸ் ட்யூட்டி போடலாமா என்று யோசனை. அப்படி கொடுப்பதில் நன்மை யிருக்கிறது என்ற ஒரு அபிப்பிராயமும் இருக்கிறது.

SRI J. MATHA GOWDER : விற்பனை வரியை கலால் வரியோடு சேர்ப்பதற்கு தாமதம் ஏற்பட்டாலும், தேயிலை போன்ற பொருள் களுக்கு இரு வரி இருப்பதால், அதனால் சிரமம் இருப்பதால், தேயிலைக்குள்ள விற்பனை வரியை கலால் வரியோடு சேர்ப்பதற்கு அரசாங்கம் கூடிய விரைவில் நடவடிக்கைகள் எடுக்குமா?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த யோசனையும் அங்கு ஆலோசிக்கப்பட்டது.

SRI A. GOVINDASAMY : விற்பனை வரிக்குப் பதிலாகத்தான் கலால் வரி போட உத்தேசித்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அப்படியானால் நம் ராஜ்ய சர்க்காருக்கு வருமானம் குறையாதா? அதைத் தடுக்க நம் அரசாங்கம் என்ன செய்திருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : துணி, சர்க்கரை, புகையிலை இம்மூன்று பண்டங்களுக்கு விற்பனை வரிக்குப் பதிலாக எக்ஸைஸ் வரி விதிக்க ஒத்துக்கொண்டோம். அதனால் நமக்கு முன்பு வந்த வருமானத்தைவிட இப்பொழுது அதிகம் வந்து கொண்டிருக்கிறது.

Display of prices of articles in shops

* 30 *Q.*—SRI A. A. RASHEED :
SRI A. VEDARATHNAM : } Will the Hon. the Minister for Home be pleased to state whether the Union Government have asked the opinion of the Government regarding the proposed legislation for the compulsory display of prices of articles in shops?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI A. A. RASHEED : May I know whether there is a proposal before this Government for the compulsory display of prices in the shops? If so, when do they propose to bring such a legislation?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no such proposal with this Government.

20th January 1961]

SRI A. VEDARATHNAM : *முக்கியமான உணவுப் பண்டங்களின் விலையை மட்டுமாவது கடைகளில் எழுதிப் போடும்படிச் செய்ய அரசாங்கம் உத்தரவிடுமா ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : *கடைகளில் விலைகளைப் போடவேண்டுமென்றால் விலை நிர்ணயிக்கப்படவேண்டும். அப்படி விலை நிர்ணயம் செய்யப்பட்டால் அப்பொழுது கண்ட்ரோல் வருவது மாதிரியாகும். அதை பொது மக்கள் சாதாரணமாக விரும்பமாட்டார்கள். ஆகவே அம்மாதிரி உத்தேசம் இல்லை.*

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that such display of prices will help the public to boycott and reject those goods which are highly priced?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If the prices are high and there is exploitation, the public can freely understand them and they can take their own action.

Potatoes

*** 31 *Q.*—SRI A. VEDARATHNAM :** *கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) நம் மாநிலத்தில் உருளைக்கிழங்கிற்கு என்ன விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது ?

(இ) இதை மாற்றி அமைக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) There is no control over the price of potatoes.

( ) Does not arise.

SRI A. VEDARATHNAM : *சமீபத்தில் உருளைக்கிழங்கின் விலை அவர்களுக்கு கட்டுபடியாகாத அளவு குறைந்து விட்டதென்று அரசாங்கத்தினிடம் டெப்யுடேஷன் வந்தார்களா ? அதன் பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறது ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : *உருளைக்கிழங்கின் விலை விவசாயிகளுக்கு கட்டுபடியாகாத அளவு குறைந்துவிட்டதென்று வந்து தெரிவித்தார்கள். ஆனால் அதில் நேரிடையாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள ஒன்றுமில்லை. அதை அப்படியே அரசாங்கம் அதிக விலைக்கு வாங்கி எடுத்துக் கொள்ளமுடியாது. அப்படி கனம் அங்கத்தினர்கள் யாரும் யோசனை கூற மாட்டார்கள். ஆனால் வேறு சில வசதிகள், ரெயில் வசதிகள், வேறு ராஜ்யங்களில் விற்க வசதிகள் இவைகள் எல்லாம் கவனிக்கப்பட்டு வருகின்றன.*

SRI J. MATHA GOWDER : *சென்ற ஆண்டு உருளைக்கிழங்கின் விலை மிகமிகக் குறைவாக விற்ற காரணத்தினால் விவசாயிகளுக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்களிடம்*